களை அதிகப்படுத்தி சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஏழை மக்களுக்கு வருவாய் கிடைக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள கிறேன்.

பெருஞ்சாணி சிற்றார் நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்க வழங்கப்படும் படகுகள்.

20—(*வினா எண் 17528) திரு. டி. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பெருஞ்சாணி, சிற்றார் நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்கும் படகுகளுக்கு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: துணைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் சிற்றார் 1, சிற்றார் 2, பெருஞ்சாணி ஆகிய நீர்த்தேக்கங்களில் மீன் பிடிப்பதற்கு இயந்திரம் பொருத்தப்பட்ட கண்ணாடி இழைப் படகுகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1984 மார்ச்சுக்குள் அவை வழங்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி: துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே கடந்த 1983 ஆம் ஆண்டிலேயே வழங்கப்படும் என்று சட்ட மன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. இப்போது 1984 மார்ச்சுக்குள் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். அதற்குள் நிச்சயமாக வழங்கபபட்டுவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: துணைத் தலைவரவர்களே, 1984 மார்ச்சுக்குள் தேவையான நடவடிக்கைகளை எடுத்து, வழங்கப்படும்.

திரு. டி. மணி: துணைத் தலைவரவர்களே, கடலிலே மீன் பிடிக்கின்ற மீன்பிடி விசைப் படகுகள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் மூன்று மைல்களுக்கு அப்புறம்தான் மீன் பிடிக்கலாம் என்று ஹைகோர்ட்டும் சுப்ரீம் கோர்ட்டும் உத்தரவிட்டும் அதை மீறி அவர்கள் மீன் பிடிப்பது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் பற்றி குறிப்பாகச் சொல்வார்களானால் துறையின் மூலம் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம்: துணைத் தலைவரவர்களே, இந்த கண்ணாடி இழைப் படகுகள் எத்தனை நீர்த்தேக்கங்களுக்கு வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது? இந்தப் படகுகளில் எத்தனை ஹார்ஸ் பவர் எஞ்சின் பொருத்தப்படும்? ஒரு படகின் விலை என்ன? அதற்கு சப்சிடி உண்டா?

மாண்புமிகு திரு க. கலைமணி: துணைத் தலைவரவர்களே, மொத்தம் 15 நீர்த்தேக்கங்களுக்கு 15 கண்ணாடி இழைப் படகுகள் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது. ஒரு படகின் விலை சுமார் 40,000 ரூபாய்.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு. ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்ததால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) அடைமழையினால் ஏற்பட்டுள்ள சேதம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் அண்மைக் கால வரலாற்றிலே இல்லாத அளவுக்கு இந்த கோடைகாலத்தில் சடந்த ஒரு வாரமாக மழை பெய்கிறது. பல்வேறு மாவட்டங்களில் ஏற்கெனவே பெய்த மழையினால் ஏற்பட்ட சேதம் பற்றியும் அரசு எடுக்கின்ற நிவாரண நடவடிக்கை பற்றியும் ஒரு வெள்ளை அறிக்கை வைக்கவேண்டுமென்று கேட்டு, வெள்ளை அறிக்கை ஒன்றை வைப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்றாலும் இப்போது தொடர்ந்து மழை பெய்துக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே பெய்த மழையினால் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வேளாண் பொருள்கள் சேதம் அடைந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கான குடிசைகள் சேதம் அடைந்திருக்கின்றன. உயிருக்கும் உடைமைக்கும் பெருமளவில் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அவை பற்றி இந்த மன்றம் பெரிதும் கவலை கொண்டிருக்கின்ற காரணத்தால், சட்ட மன்றம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், அமைச்சரவர்கள் நேரில் பார்த்து இந்த நிவாரணப் பணிகளை முடுக்கிவிடவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் குறைகளைப் போக்க புதிதாக ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களா, சேதம் பற்றிய விவரம் தற்போது அமைச்சரிடம் இருக்கிறதா என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த விவரங்கள் இருந்தால், அரசின் தரப்பிலே இன்றைக்கு இந்த மன்றத்திலே தெரிவிப்பதாக இருந்தால், அது இந்த மன்றத்திற்கும் மக்களுக்கும் உதவியாக இருக்கும்.